**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 328/2021</u>**

**<u>வழக்கு சாட்சி PW-1</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரிக்கனி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | மாரிமுத்து | தொழில் | : | டாஸ்மார்க் சூப்பர்வைசர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 05.03.2026.

**(1 ம் எதிரி ஆஜர்.** இதர **எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் டாஸ்மார்க் கடையில் சூப்பர்வைசராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. 26.04.2019 ம் தேதி, அத்தியூத்து டாஸ்மார்க் கடையில் நான் சூப்பர்வைசராக பணியில் இருந்தபோது, அன்று இரவு 10.00 மணிக்கு கடையை முடித்து விட்டு, 10.30 மணியளவில் அன்றைய விற்பனைத்தொகையான ரூ.1,21,240/-ஐ தென்காசி இந்தியன் வங்கியில் செலுத்துவதற்காக வேண்டி எனது இருசக்கரவாகனத்தில் கிளம்பினேன். அடைக்கலப்பட்டணம் அருகே வரும்போது நான் நிலை தடுமாறி கீழே விழுந்து விட்டேன். அப்போது அடையாளம் தெரியாத 3 நபர்கள் ஒரே இருசக்கரவாகனத்தில் வந்தார்கள். அவர்கள் என்னிடமிருந்த பணத்தையும், இருசக்கரவாகனத்தையும் எடுத்துக்கொண்டு சென்று விட்டார்கள்.

நான் ஆலங்குளம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். நான் புகார் மனுவை 27.04.2019 ம் தேதி கொடுத்தேன். 2,3 நாட்கள் கழித்து பணத்தை கண்டுபிடித்து விட்டதாக போலீசார் தகவல் சொன்னார்கள். என்னுடைய இருசக்கரவாகனத்தையும், பணத்தையும் நான் ஆலங்குளம் நீதிமன்றத்தின் மூலமாக பெற்றுக்கொண்டேன். பணத்திற்கான புகைப்படம் 4 எண்ணிக்கை – அ.சா.ஆ.2 ஆகும். TN–76–AF–8625 என்ற பதிவெண் கொண்ட யாமகா இருசக்கரவாகனம் – அ.சா.பொ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்லியவாறு தான் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 புகார் மனுவில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் மனுவிலுள்ள சரத்துகளின் விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

(1ம் எதிரியின் குறுக்கு விசாரணையானது, இதர எதிரிகளின் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.)

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.06 18:37:40 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 328/2021</u>**
**<u>வழக்கு சாட்சி PW-2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமர் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணியன் | தொழில் | : | டாஸ்மார்க் விற்பனையாளர் |
| கிராமம் | : | ஆலடிப்பட்டி | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 05.03.2026.

**(1ம் எதிரி ஆஜர்.** இதர **எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் ஆலடிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டாஸ்மார்க் கடையில் விற்பனையாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அ.சா.1 மாரிக்கனியை எனக்கு தெரியும். 26.04.2019 ம் தேதி, அத்தியூத்து டாஸ்மார்க் கடையில் நான் விற்பனையாளராக பணியில் இருந்துவிட்டு அன்று இரவு 10.00 மணிக்கு கடையை முடித்து விட்டு, 10.30 மணியளவில் அன்றைய விற்பனைத்தொகையான ரூ.1,21,240/-ஐ அ.சா.1 தென்காசி இந்தியன் வங்கியில் செலுத்துவதற்காக வேண்டி அவரது இருசக்கரவாகனத்தில் கிளம்பிவிட்டார். மெயின்ரோடு வரை நானும் வேறு ஒரு இருசக்கரவாகனத்தில் சென்று விட்டு என்னுடைய வீடு வேறு பாதை வழியாக செல்ல வேண்டும் என்பதினால் நான் சென்று விட்டேன். இரவு 11.30 மணியளவில் எனக்கு அ.சா.1 அவர் கொண்டு சென்ற பணத்தை திருடி சென்று விட்டதாக கூறினார். நான் அடைக்கலப்பட்டணத்திற்கு சென்றேன். மறுநாள் அ.சா.1 இது சம்பந்தமாக

புகார் கொடுத்தார். யார் பணத்தை எடுத்து சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்லியவாறு தான் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் கேள்விபட்டு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான்.

(1ம் எதிரியின் குறுக்கு விசாரணையானது, இதர எதிரிகளின் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.)

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.06 18:37:50 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 328/2021**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துக்குட்டி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கணபதி | தொழில் | : | டாஸ்மார்க் விற்பனையாளர் |
| கிராமம் | : | மருதம்புத்தூர் | வயது | : | 52 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 05.03.2026.

**(1 ம் எதிரி ஆஜர்.** இதர **எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் மருதம்புத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் டாஸ்மார்க் கடையில் விற்பனையாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அ.சா.1 மாரிக்கனி, அ.சா.2 ராமர் ஆகியோர்களை எனக்கு தெரியும். 26.04.2019 ம் தேதி, அத்தியூத்து டாஸ்மார்க் கடையில் நான் விற்பனையாளராக பணியில் இருந்துவிட்டு அன்று இரவு 10.00 மணிக்கு கடையை முடித்து விட்டு, 10.30 மணியளவில் அன்றைய விற்பனைத்தொகையான ரூ.1,21,240/-ஐ அ.சா.1 தென்காசி இந்தியன் வங்கியில் செலுத்துவதற்காக வேண்டி அவரது இருசக்கரவாகனத்தில் கிளம்பிவிட்டார். பின்னர் எனக்கு போன் மூலம் அவர் வண்டியிலிருந்து கீழே விழுந்ததாகவும், பணம் திருடு சென்றதாகவும் கூறினார். மறுநாள் ஆலங்குளம் அரசு மருத்துவமனையில் நான் அவரை சென்று பார்த்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.06 18:37:59 +0530